
**மார்ச் – 31**

# TNPSC துளிகள்

- சிக்கிமைச் சேர்ந்த ஸ்துதி பிரதான், உலக இளைஞர் நாடாளுமன்றத்தில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்தியாவின் முதன்மையான உள்நாட்டு கிரிக்கெட் தொடரான ரஞ்சி கோப்பையை, சுமார் 70 ஆண்டுகளுக்குப் பிறகு ஜம்மு காஷ்மீர் முதல்முறையாக வென்றுள்ளது.
- கைலாஷ் சத்யார்த்தி "Karuna: The Power of Compassion" என்ற புதிய புத்தகத்தை வெளியிட்டார்.
- டிஜிட்டல் தரவுகளைப் பாதுகாப்பதை நினைவூட்டும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 அன்று உலக காப்புப் பிரதி தினம் அனுசரிக்கப்படுகிறது.

# தேசியச் செய்திகள்


## பாதுகாப்புப் படைகளின் தொலைநோக்கு திட்டம் 2047




- எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் இந்திய இராணுவத்திற்காக 'பாதுகாப்புப் படைகளின் தொலைநோக்கு திட்டம் 2047' எனும் கொள்கையை பாதுகாப்பு அமைச்சர் வெளியிட்டார்.
- 2047-ஆம் ஆண்டிற்குள் இந்திய இராணுவத்தை நவீன, ஒருங்கிணைந்த மற்றும் பல்துறைப் படையாக மாற்றுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டம் செயற்கை நுண்ணறிவு (AI), ஆளில்லா விமானங்கள், சைபர் அமைப்புகள் மற்றும் விண்வெளித் திறன்கள் போன்ற தொழில்நுட்பங்களில் கவனம் செலுத்துகிறது.
- இது சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் செயல்திறனுக்காக இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்கிறது.
- நீண்ட காலப் பாதுகாப்பு இலக்குகளை அடைய மாற்றம், ஒருங்கிணைப்பு மற்றும் சிறந்து விளங்குதல் போன்ற நிலைகளை இது உள்ளடக்கியது.

- இந்தத் தொலைநோக்கு கொள்கை, உள்நாட்டுப் பாதுகாப்பு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலமும் இறக்குமதியைக் குறைப்பதன் மூலமும் தற்சார்பு நிலையை ஆதரிக்கிறது.

## UIDAI பக் பவுண்டி திட்டம்





- ஆதார் அமைப்பின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக இந்தியத் தனித்துவ அடையாள ஆணையமானது (UIDAI) முதல் முறையாக 'பக் பவுண்டி' எனும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- UIDAI டிஜிட்டல் தளங்களில் உள்ள பாதிப்புகள் மற்றும் மறைந்திருக்கும் அபாயங்களைக் கண்டறிய இணையப் பாதுகாப்பு நிபுணர்கள் மற்றும் அறநெறிசார் ஊடுருவலாளர்கள் ஆகியோர்களை இந்தத் திட்டம் அழைப்பு விடுக்கிறது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 20 பாதுகாப்பு ஆய்வாளர்கள் அதிகாரப்பூர்வ இணைய தளம், myAadhaar தளம் மற்றும் பாதுகாப்பான QR குறியீடு செயலி போன்ற அமைப்புகளை ஆய்வு செய்வார்கள்.
- இது பாதுகாப்பு குறைபாடுகளை முன்கூட்டியே கண்டறிய உதவுவதுடன் தரவுக் கசிவுகளைத் தடுத்து தனிப்பட்ட அடையாளத் தரவுகளின் பாதுகாப்பை மேம்படுத்துகிறது.

## முன்னெச்சரிக்கை சுற்றறிக்கை (LOC) வழிகாட்டுதல்கள்

- கட்டுப்பாட்டை வலுப்படுத்தவும், முகமைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும் முன்னெச்சரிக்கை சுற்றறிக்கைகளை (LOCs) வெளியிடுவதற்கான விதிகளை மத்திய உள்துறை அமைச்சகம் மாற்றியமைத்துள்ளது.
- தேசிய மகளிர் ஆணையம் (NCW), தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC) மற்றும் தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் (NCLT) போன்ற சட்டரீதியான அமைப்புகள் நேரடியாக LOC-களைக் கோர முடியாது மாறாக அவை காவல்துறை அல்லது மத்திய முகமைகள் மூலமாகவே விண்ணப்பிக்க வேண்டும்.

- LOC படிவங்களில் இப்போது தடுத்து நிறுத்தித் தகவல் தெரிவித்தல், வெளியேறுவதைத் தடுத்துத் தகவல் தெரிவித்தல் அல்லது சிறப்பு நிகழ்வுகளுக்காக "குறிப்புகளைப் பார்க்கவும்" ஆகிய 3 தெளிவான நடவடிக்கைகள் உள்ளன.
- உளவுத்துறை (IB) மற்றும் மத்தியப் புலனாய்வு அமைப்பு (CBI) போன்ற முகமைகள், தேசியப் பாதுகாப்பு அல்லது பயங்கரவாதம் தொடர்பான வழக்குகளுக்கு மட்டுமே "குறிப்புகளைப் பார்க்கவும்" என்ற வசதியைப் பயன்படுத்த முடியும்.
- ஒரு நபர் தடுத்து வைக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட முகமை 3 மணி நேரத்திற்குள் அவரைத் தனது காவலில் எடுக்க வேண்டும் அல்லது காவல்துறையிடம் ஒப்படைக்க வேண்டும் மேலும் 24 மணி நேரத்திற்குள் முழுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- குற்றவாளிகள் அல்லது தலைமறைவாக உள்ளவர்கள் இந்தியாவை விட்டு வெளியேறுவதைத் தடுக்க, விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களில் குடியேற்றப் பணியகத்தால் (BoI) இந்த LOC பயன்படுத்தப்படுகிறது.




## பவ்யா திட்டம்




- இந்தியாவின் தொழில்துறை உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 'பாரத தொழில்

வளர்ச்சித் திட்டத்திற்கு' (BHAVYA) மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- இந்தத் திட்டம் 6 ஆண்டுகளில் (2026-2032) ₹33,660 கோடி பட்ஜெட்டில், உடனடியாகத் தொழிலைத் தொடங்கக்கூடிய 100 'பிளக்-அண்ட்-பிளே' தொழில் பூங்காக்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தொழில் பூங்காக்களானது 100-1000 ஏக்கர் பரப்பளவில் (வடகிழக்கு மற்றும் மலைப்பகுதிகளில் குறைந்தபட்சம் 25 ஏக்கர்) தயார்நிலை உள்கட்டமைப்புடன் உருவாக்கப்படும்.
- அடிப்படை மற்றும் சமூக உள்கட்டமைப்பு வசதிகளுக்காக ஏக்கருக்கு ₹1 கோடி வரை நிதியுதவி வழங்கப்படும்.
- இது தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையின் (DPIIT) கீழ் உள்ள தேசியத் தொழில்துறை வழித்தட மேம்பாட்டுக் கழகத்தால் (NICDC) செயல்படுத்தப் படும்.

# சர்வதேசச் செய்திகள்

## FATF சாம்பல் நிறப் பட்டியல் புதுப்பிப்பு




- நிதி நடவடிக்கை பணிக்குழுவானது (FATF), அதன் சமீபத்திய கூட்டத்திற்குப் பிறகு குவைத் மற்றும் பப்புவா நியூ கினியாவை தனது 'சாம்பல் நிறப் பட்டியலில்' (கண்காணிப்புப் பட்டியல்) சேர்த்துள்ளது.
- பணமோசடி, பயங்கரவாதத்திற்கு நிதி அளித்தல் மற்றும் சட்டவிரோத பணப் பரிமாற்றத்தைக் கட்டுப்படுத்தும் அமைப்புகளில் உள்ள குறைபாடுகள் காரணமாக இந்த நாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன.
- இப்பட்டியலில் உள்ள நாடுகள், அக்குறைபாடுகளைச் சரிசெய்ய கால வரையறைக்கு உட்பட்ட செயல் திட்டங்களைப் பின்பற்ற வேண்டும்.
- கடுமையான கட்டுப்பாடுகள் தேவைப்படும் 'அதி-ஆபத்து கொண்டவை' பட்டியலில் ஈரான், வடகொரியா மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளைத் தொடர்ந்து நீடிக்கின்றன.

## ஒப்புக் கொள்ளப் பட்ட முடிவுகளின் கட்டமைப்பு


- உலகம் முழுவதும் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான நீதி கிடைப்பதை மேம்படுத்துவதற்காக, ஐக்கிய நாடுகள் சபை 'ஒப்புக் கொள்ளப்பட்ட முடிவுகளின் கட்டமைப்பை' ஏற்றுக் கொண்டது.
- இது நியூயார்க்கில் நடைபெற்ற பெண்களின் நிலை குறித்த ஆணையத்தின் (CSW) 70-வது கூட்டத்தொடரில் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- இந்தக் கட்டமைப்பு சட்டப்பூர்வமாக கட்டுப்படுத்தாது; இது உறுப்பு நாடுகள் தங்கள் நீதி அமைப்புகளை மேம்படுத்துவதற்கான ஒரு வழிகாட்டுதல் கொள்கையாக செயல் படுகிறது.
- இது பாகுபாடான சட்டங்களை நீக்குவது மற்றும் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்குச் சமமான சட்ட உரிமைகளை உறுதி செய்வதில் கவனம் செலுத்துகிறது.
- இணையத்திலும் நேரடியாகவும் பெண்களுக்கு எதிராக நடக்கும் வன்முறையிலிருந்து பாதுகாப்பை வலுப்படுத்துவதையும், ஆதரவு அமைப்புகளை மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.




# பொருளாதாரச் செய்திகள்

## RBI ஈவுத்தொகை கட்டமைப்பு 2026




- இந்திய ரிசர்வ் வங்கி தனது வங்கி ஈவுத்தொகை கட்டமைப்பை மாற்றியமைத்து உள்ளதுடன் 2026-27 நிதி ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் புதிய செயலாக்க விதிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- வலுவான மூலதன இருப்புகளைப் பராமரிப்பதன் மூலமும், நிதி அபாயங்களைத் தடுப்பதன் மூலமும் வங்கி முறையைப் பாதுகாப்பதே இதன் நோக்கமாகும்.

- ஈவுத்தொகை வழங்கலை வங்கிகளின் நிதி வலிமை மற்றும் நிலைத்தன்மையுடன் சிறப்பாக இணைக்க, புதிய விதிகள் 2025-ஆம் ஆண்டின் கட்டமைப்பிற்கு மாற்றாக அமைகின்றன.
- போதுமான மூலதனத்தைத் தக்க வைத்துக் கொள்வதை உறுதி செய்வதற்காக, வங்கிகள் தங்கள் வரியைத் தள்ளுபடி செய்த பின் கிடைக்கும் லாபத்தில் 75%-க்கு மேல் ஈவுத்தொகையாக வழங்க முடியாது.
- ஈவுத்தொகை முடிவுகள் ஆனது மூலதனப் போதுமான விகிதம், லாபத்தன்மை மற்றும் சொத்து தரம் போன்ற காரணிகளைப் பொறுத்து அமையும்.
- வெளிநாட்டு வங்கிகள் முன் அனுமதியின்றித் தங்கள் லாபத்தைத் தாய் நிறுவனங்களுக்கு அனுப்பலாம், ஆனால் அவை ஒழுங்குமுறை நிபந்தனைகளைப் பின்பற்ற வேண்டும்.

## அமெரிக்க - இந்தியப் பருத்தி வர்த்தகம்




- 2025-ஆம் ஆண்டில் அமெரிக்காவிற்கு பருத்திப் பொருட்களை வழங்கும் மிகப்பெரிய நாடாக சீனாவை முந்தி இந்தியா முதலிடம் பிடித்துள்ளது.
- இந்தியா சுமார் 0.6 மில்லியன் டன் பருத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்த அதே நேரத்தில் அதிக வரி (10%-125%) மற்றும் ஒழுங்குமுறைக் கட்டுப்பாடுகள் காரணமாக சீனாவின் ஏற்றுமதி சுமார் 0.5 மில்லியன் டன்னாகக் குறைந்துள்ளது.
- சீனாவின் உய்குர் கட்டாய உழைப்பு தடுப்புச் சட்டம் (UFLPA) போன்ற அமெரிக்கச் சட்டங்களானது, சீன இறக்குமதியைக் குறைத்து இந்தியா மற்றும் பிற நாடுகளில் இருந்து வாங்குவதை அதிகரித்தன.
- ஆடைகள் மற்றும் வீட்டு ஜவுளிகள் போன்ற பருத்தி சார்ந்த பொருட்களின் உலகின் மிகப்பெரிய இறக்குமதியாளராக அமெரிக்கா தொடர்ந்து நீடிக்கிறது.


# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்தியாவில் சிறிய அணு உலைகள்

- அணுசக்தி திறனை அதிகரிக்கவும், தூய எரிசக்தி இலக்குகளை ஆதரிக்கவும் இந்தியா

மூன்று வகையான சிறிய வகை அணு உலைகளை (SMRs) உருவாக்கி வருகிறது.

- 300 மெகாவாட் வரை மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட இவை சிறிய மற்றும் மேம்பட்ட வகை அணு உலைகள் ஆகும்.
- இதில் பாரத் சிறிய கூறுநிலை அணு உலைகள் (Bharat SMR), SMR-55 மற்றும் மின்சாரம் மற்றும் ஹைட்ரஜன் உற்பத்திக்கான 'உயர் வெப்பநிலை வாயு குளிரூட்டப்பட்ட அணு உலைகள்' ஆகியவை அடங்கும்.
- இவை அழுத்தப்பட்ட நீர் உலைகள் மற்றும் குறைந்த செறிவூட்டப்பட்ட யுரேனியம் எரிபொருள் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகின்றன.
- SMR-கள் பாதுகாப்பானவை, செலவு குறைந்தவை மற்றும் கார்பன் உமிழ்வைக் குறைக்க வல்லவை.




## ஜவுளிக் கழிவு அறிக்கை 2026

- மறுசுழற்சி மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்காக, இந்தியாவில் ஜவுளி கழிவு மதிப்பு சங்கிலியை வரைபடமாக்குவது குறித்த அறிக்கையை ஜவுளி அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- இந்தியாவில் உற்பத்தி செயல்முறைகள் மற்றும் நுகர்வோர் பயன்பாட்டிற்குப் பிறகு ஆண்டுதோறும் சுமார் 70.73 லட்சம் டன் ஜவுளி கழிவுகள் உருவாகின்றன.
- வலுவான சேகரிப்பு மற்றும் மறுசுழற்சி அமைப்புகள் காரணமாக, உற்பத்தியின் போது ஏற்படும் கழிவுகளில் சுமார் 95% மீட்கப்படுகிறது.
- நூற்புத் துறை அதன் உற்பத்தியின் போது ஏற்படும் கழிவுகளை மீண்டும் பயன்படுத்துவதில் கிட்டத்தட்ட 100% வெற்றியை எட்டியுள்ளது.
- மொத்த ஜவுளிக் கழிவுகளில் சுமார் 70% குப்பைக் கிடங்குகளுக்குச் செல்லாமல் மறுசுழற்சி செய்யப் படுகிறது அல்லது பிற பயன்பாடுகளுக்கு மாற்றப்படுகிறது.
- ஜவுளி மறுசுழற்சி சந்தை 2030-ஆம் ஆண்டிற்குள் 3.5 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டக்கூடும் மற்றும் கிட்டத்தட்ட ஒரு லட்சம் 'பசுமை வேலைவாய்ப்புகளை' உருவாக்கும்.




# மாநிலச் செய்திகள்

## ஜல் ஜீவன் திட்டம் 2.0 – மேகாலயா




- ஜல் ஜீவன் திட்டம் (JJM) 2.0-இன் கீழ் சீர்திருத்தம் அடிப்படையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்ட 12-வது மாநிலமாக மேகாலயா உருவெடுத்து உள்ளது.
- கிராமப்புறங்களில் உள்ள வீடுகளுக்குச் செயல்படும் குழாய் நீர் இணைப்புகளை

வழங்குவதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ஜல் ஜீவன் திட்டம் 2.0 என்பது சேவை வழங்கல், நிலைத்தன்மை மற்றும் பரவலாக்கப் பட்ட நீர் மேலாண்மை ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- இந்த ஒப்பந்தம், நீர் விநியோகத்தை நிர்வகிப்பதில் கிராம ஊராட்சிகள் மற்றும் கிராம நீர் மற்றும் சுகாதாரக் குழுக்களின் பங்களிப்பை ஊக்குவிக்கிறது.
- இந்தத் திட்டத்தின் கீழ் மேகாலயா தற்போது 83%-க்கும் அதிகமான கிராமப்புற குழாய் நீர் இணைப்புகளை எட்டியுள்ளது.

## ஏரி மற்றும் காற்று கண்காணிப்பு முயற்சி




- நகரங்களில் உள்ள ஏரிகளின் சுகாதாரம் மற்றும் காற்றின் தரத்தைக் கண்காணிக்கவும் மேம்படுத்தவும் குஜராத் அரசு 'ஏரி மற்றும் காற்று கண்காணிப்பு' முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.
- ஏரிப் பரப்பில் ஏற்படும் மாற்றங்கள், பாசி வளர்ச்சி, கழிவுகள் மற்றும் நீரின் தரக் குறியீடுகளைக் கண்காணிக்க இது செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.
- 17 மாநகராட்சிகள் மற்றும் 152 நகராட்சிப் பகுதிகளில் நிகழ்நேரக் காற்றின் தரக் குறியீடு (AQI) கண்காணிப்பு மையங்கள் அமைக்கப்படும்.
- காற்று மாசுபாடு அதிகரிக்கும் போதோ அல்லது ஏரியின் நிலை மோசமடையும் போதோ இந்த அமைப்பு தானியங்கி எச்சரிக்கைகளை வழங்கும்.

## டெல்லியில் நுண்பாசி காற்று கோபுரம்

- வாகனங்களால் ஏற்படும் காற்று மாசுபாட்டைக் குறைக்க, இந்தியாவின் முதல் நுண்பாசி அடிப்படையிலான காற்று கோபுரம் புது தில்லியில் நிறுவப்பட்டுள்ளது.
- புதிய மாசு கட்டுப்பாட்டுத் தொழில்நுட்பத்தைச் சோதிப்பதற்கான ஒரு சோதனைத் திட்டமாக ஏரோசிட்டி நெடுஞ்சாலைக்கு அருகில் இந்தக் கோபுரம் அமைக்கப் பட்டு உள்ளது.
- இது கார்பன் டை ஆக்சைடு, நைட்ரஜன் ஆக்சைடுகள் மற்றும் நுண் துகள்கள் போன்ற மாசுபடுத்திகளை உறிஞ்சுவதற்கு நுண்பாசிகள் மற்றும் ஒளிச்சேர்க்கை முறையைப் பயன்படுத்துகிறது.

- மாசுபட்ட காற்று கோபுரத்திற்குள் இழுக்கப்பட்டு, இயற்கையான முறையில் ஆக்ஸிஜன் மற்றும் பாசி உயிர்ப்பொருளாக மாற்றப்படுகிறது.
- இது நகர்ப்புறக் காற்றின் தரத்தை மேம்படுத்துவதற்கான இயற்கையைச் சார்ந்த மற்றும் நிலையான ஒரு முறையாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★